# "பூக்குமோ? புது உலகு"

"உள்ளத்தில் உள்ளது கவிதை
உணர்வு உருவெடுப்பது கவிதை"

ஆர்.ராகுலன் (மட்டுநகர் ராஜதல்)



வெளியீடு-01

# பூக்குமோ? புது உலகு

"உள்ளத்தில் உள்ளது கவிதை

உணர்வு உருவெடுப்பது கவிதை"

**ஆர்.ராகுலன்** (மட்டுநகர் ராகுல்)

வெளியீடு—01

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பூக்குமோ? புது உலகு |
| ஆக்கம் | : | ஆர். ராகுலன் (மட்டு நகர் ராகுல்) |
| முதல் பதிப்பு | : | 2012 |
| பக்கம் | : | (ix)+20 |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கே |
| கணனி வடிவமைப்பு | : | அ. ஜெயலக்சன் |
| பதிப்பு | : | செ‌ன்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு. |
| விலை | : | 80/= |

# சமர்ப்பணம்

"கவிதைகளை கவிதை உணர்வோடு வாசிக்கும்
அனைத்து உள்ளங்களுக்கும் இந்நூல்
சமர்ப்பணம்"

# சங்கமிக்கும் கவிதைகள்


| | | |
|---|---|---|
| 01. | சாதி என்ற சொல்லை அழித்திடுவோம் | 01 |
| 02. | புதுயுகம் தேடும் பெண் | 02 |
| 03. | ஏழையின் குரல் | 03 |
| 04. | வறுமை எனும் கொடிய நோய் | 04 |
| 05. | உலக மொழிகளில் தமிழ் மொழி | 05 |
| 06. | புதுயுகம் படைத்திடுவோம் | 06 |
| 07. | ஏன் இந்த மௌனம் | 07 |
| 08. | வாழ்கை எனும் நாடக மேடை | 08 |
| 09. | நிலவே நீ தேயாதே | 10 |
| 10. | அனர்த்தம் | 11 |
| 11. | நள்ளிரவு | 13 |
| 12. | சிறகு ஒடிந்த பறவை | 14 |
| 13. | கருத்துடன் கற்போம் | 15 |
| 14. | எங்கு செல்கின்றாய் (சீதனம்) | 16 |
| 15. | ஊழல் தீயே ஒழிந்துவிடு | 17 |
| 16. | முதியோர் வாழ்வை ஒளிர்ச் செய்வோம் | 18 |
| 17. | கவிதை | 19 |

## ஆசியுரை

"பார்க்குமிடமெங்கும் நீக்கமென நிறைகின்ற பரமானந்தப் பொருளாகிய இறைவனின் திருவடிகளை சிரமேற்றாங்கி" மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மாணவன் ர.ராகுலனுக்கு எனது நல்லாசியை வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றேன். எக்காரியத்தை நாங்கள் செய்ய நினைத்தாலும் இறைவனின் அருள் வேண்டும். இறைவனின் அருள் கிடைத்தமையினாலே தான் செல்வன் ராகுலன் தனது கவிதை தொகுப்பை இன்று வெளிக்கொண்டு வந்துள்ளார்.

தமிழ் மக்களுக்கே உரித்தான கவிதையையும், பண்பாட்டினையும் பேணிக்காப்பதிலும், மேம்படுத்துவதிலும் இன்று மாணவர்கள் ஆற்றிவரும் பணிகள் அளப்பெரியன. அதேபோல்தான் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் இலைமறைகாயாக மறைந்து கிடக்கும் கவிதைகளை கன்னிப் படைப்பாக வெளிக்கொணர்ந் துள்ளார். இவரின் கவிதை யாவற்றையும் நோக்கும் போது தனது மனதிலே தோன்றிய எண்ணக்கருத்துக்களை தத்ருபமாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

நாகரீகமான ஒரு சமூகத்திற்கு ஏற்றவகையில் தனக்கென ஒரு சிறந்த பாணியிலும் யாவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் இவரது கவிதைகள் சிறந்த எளிய நடையில் சிறப்பாக அமைந்துள்ளதை பாராட்டாமல் இருக்க முடியாது .

ஆலமரமாய் அடர்ந்து கிளை நிழல் பரப்பும் வானத்து வண்ண நிலா ஒளி சிந்தி நிற்பது போல் வாழ்வின் வளமனைத்தும் வற்றாது வாணியின் அருள் பெற்று இவரின் பணிதொடர வாழ்த்துகின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**தி. சரவணபவசர்மா**
*முருகன் கோவில் (பூசகர்)*
*இந்துக்கல்லூரி.*

# அணிந்துரை

"காலம் கவிஞனைக்கொல்லும் - அவனது
கவிதைகள் காலத்தை வெல்லும்"

என்பது நாவலாசிரியர் ஜெயக்காந்தன் அவர்களின் நயமான கருத்தாகும். கவிஞன் காலநியதிகளால் மறைக்கப்பட்டாலும் அவனது கவிதைகள் காலத்தை வென்று நிலைத்து நிற்கும் என்பது அக்கருத்தின் பொருளாகும். அந்த வகையில் ர.ராகுலன் எனும் பெயருடைய மட்/இந்துக்கல்லூரி மாணவன் பள்ளிப் பருவத்தின் போதே தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியொன்றில் இறங்கியதைக் காண்கின்றேன்.

"பூக்குமோ புதுஉலகு" எனும் கன்னிப்படைப்பின் மூலமாக கவிஞனுக் கான முகவரியை எழுத முனைந்துள்ளார். "முகத்திரை கிழியட்டும் முத்திரை பதியட்டும்" என்கின்ற எனது வாக்கிற்கு அமைய அவரது கவிதை முத்திரை பதியவேண்டுமென நான் வாழ்த்து கின்றேன். பள்ளிக்கற்கை, பிரத்தியேகக் கற்கை, பரீட்சைகள் என்ற கற்றல் பொறிமுறைக்குள் கைதியாகிவிடாமல் கவிதை வானில் ராகுலன் சிறகுவிரித்துப் பறக்க முனைகின்றார்.

முற்போக்கான சிந்தனைத் தளத்தில் இருந்து கவிதைக் களத்திற் குள் நுழைய முற்படும் மட்டு நகர் ராகுலன் சமத்துவம், நியாயத் துவம், புதுமை, விடுதலை, ஊழல், சீதனம் போன்ற எண்ணங்களை இயல்பாக கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. நேர்கணிய சிந்தனைகளை நேர்மையாகவும் முற்போக்காகவும் வெளிக் கொணர்ந்து வளர்த்துச் செல்ல வாழ்த்துகின்றேன்.

வாழ்க! ராகுலன் வளர்க! அவரது கவித்துவம்

வாழ்த்துவோன்
**ஞா.ஸ்ரீநேசன்**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர்*
*மட்டக்களப்பு மேற்கு*

## வாழ்த்துரை

"தமிழுக்கு அமுதென்று பெயர்~அந்தத்தமிழ் எங்கள் உயிருக்குநேர்
(பாரதிதாசன்)"

மாணவன் ஆர்.ராகுலன் அவர்களின் கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமகிழ்கின்றேன். பாடசாலைப் பருவத்தில் இவர் கவிதை நூலொன்றை வெளியிட முன்வந்தமை பாராட்டுக்குரியது. தமிழ் மொழியிலான வாசிப்பு எழுத்து சார் அறிவாற்றல்கள் குறைந்து வரும் இன்றைய ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் பாடசாலைப் பருவத்திலேயே மாணவர்களை வாசிக்க எழுதத்தூண்டும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

ராகுலன் அவர்களின் கவிதைகளில் சமூகம், இயற்கை, மொழி என்ற போக்கினை காணக்கூடியதாக உள்ளது. அவரது சமூகம் சார்ந்த கவிதைகளில் மனித நேயப்பார்வைகள் அதிகம் இழை யோடியுள்ளன. சிறுவயதிலேயே இவ்வாறான சிந்தனை வெளிப் பாடுகள் வருவது பாராட்டுக்குரியது. தமிழர் என்பது பெருமை யல்ல மாறாக நாம் தமிழ் மொழியை எந்தளவு நேசிக்கின்றோம் என்பதே பெருமை. இவரது "உலக மொழிகளில் தமிழ்" என்ற கவிதை அவர் கொண்டுள்ள மொழிப்பற்றை காட்டி நிற்கின்றது.

பாடசாலைப்பருவத்தில் எழுத ஆரம்பித்திருக்கும் ராகுலன் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தன் எழுத்தாற்றலை கை விடாது தொடர்ச்சியாக வளர்த்துச்செல்ல வேண்டும் என்பது எனது அவா. விசமத்தனங்களை தள்ளி ஆக்கபூர்வமான விமர்சனங்களை உள்வாங்கிக் கொண்டு எதிர்காலத்தில் சிறந்த கவிஞராக வரவேண்டும் என வாழ்த்தி அதற்கு இறைஅருள் இருக்க வேண்டுமெனக் கூறி நல் உள்ளத்து டன் விடைபெறுகின்றேன்.

வாழ்க தமிழ்!

*என்றும் அன்புடன்*

எஸ்.எஸ்.அமல் *(ஏரூர் அமரன்)*

## வாழ்த்துவோம் வளர்ந்திட

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் தரம் 13 கலைப்பிரிவில் கல்வி பயிலும் செல்வன். ரவீந்திரா ராகுலன் கவிதை நூல் ஒன்றைத் தொகுத்துள்ளதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அவரது கன்னிமுயற்சி வெற்றியடைய வேண்டும். யெளவனப் பருவத்தின் வாசலில் மலர்ந்துள்ள அவரது கவிதை நூலை விமர்சிக்க முற்படாமல் முதற்கண் இத்தகைய முயற்சிக்காக ராகுலனைப் பாராட்ட வேண்டும். வாசிப்பு, எழுத்தாக்கம் என்பவற்றில் மாணவரது கரிசனை வெவ்வேறு புறக்காரணிகளால் சிதறடிக்கப்படும் இக்கால கட்டத்தில் ஆர்வமுடன் கவிதை புனைய முற்படும் இளரத்தம் என்றவகையில் இம்மாணவனை மனமார வாழ்த்துகின்றேன்.

கவிதைகளின் பிரசவம் வெவ்வேறு பரிமாணம் எடுக்கும் இக்கால கட்டத்தில் ராகுலனின் கவிதைகளும் அவற்றின் கனதி பற்றிய விடயங்களை விடுத்து அவர் சொல்லமுற்படும் செய்தியைப் புரிந்து கொள்ள முற்படுவோம். காலம் ராகுலனை ஒரு நல்ல கவிஞனாக அடையாளம் காட்ட வேண்டுமெனில் நாம் முதலில் செய்ய வேண்டியது குறைகளை விடுத்து நிறைவான அம்சங்களை இனம்காண்பதும், ஊக்குவிப்பை வழங்குவதுமேயாகும். எனவே ராகுலன் தனது கன்னி முயற்சியில் வெற்றியடையப் பிரார்த்திப்போம்.

எஸ். புண்ணியமூர்த்தி *(ஆசிரியர்)*
*மட்/ இந்துக்கல்லூரி*
*மட்டக்களப்பு.*

## பாராட்டுரை

எமது பாடசாலையில் தரம் 13 கலைப்பிரிவில் கல்விபயிலும் ரவீந்திரா ராகுலன் என்ற மாணவனால் வெளியிடப்பட்டுள்ள கவிதை நூல் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். சமூகத்தின் எதிர் பார்ப்புக்களை வெளிப்படுத்தியுள்ள இம்மாணவனின் ஆக்கங் களை வரவேற்கின்றேன். ஆரம்பமான இப்பணி தொடர்ந்தும் பெருவிருட்சமாகி பல நூல்களை வெளிப்படுத்தும் அளவிற்கு விரிவாக்கப்பட வேண்டுமென்பது எனது அவா. இந்துக் கல்லூரி யிலிருந்து மற்றுமொரு கவிதைப் பூ வெளிப்படுகின்றது. பூ கனியாகி, காயாகி பெருவிருட்சமாய் பிரகாசிக்க எனது நல்லாசிகள் என்றும் உண்டு எனக் கூறி வாழ்த்துகின்றேன்.

**“வாழ்க பல்லாண்டு புதிய**
**பரிமாணங்களுடன்.”**

**பொன்.தெய்வேந்திரா**
*மட்/ இந்துக்கல்லூரி அதிபர்*
*மட்டக்களப்பு.*

## என்னுரை

சிறு வயது முதல் வாசிப்பதில் அதீத ஈடுபாடு உள்ளவனாய் இருந்தேன். அத்தோடு கவிதை எழுதுவதும் என் பொழுது போக்காக காணப்பட்டது. நான் வாசிப்பதிலும், எழுதுவதிலும் முக்கிய காரணமானவர்கள் என்னை வழிநடத்திச் சென்ற கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர்களும், தற்பொழுது என்னை வழிநடத்திச் செல்லும் மட்/இந்துக் கல்லூரி ஆசிரியர்களும், என் பெற்றோர்களுமே ஆவார்கள்.

கவிதைகளை ரசிக்காத உள்ளங்களே இல்லை எனலாம். கவிதைகளை ரசிக்கும் பல உள்ளங்கள் இருந்தாலும், அக்கவிதைகளை எழுதும் உள்ளங்கள் சிலவற்றையே நாம் காணலாம். அந்த வகையில் கவிதை எழுதும் உள்ளங்களில் நானும் ஒருவனாக இருப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன். நான் படைக்கும் கவிதைகள் வெறுமனே கசக்கி எறியும் காகிதம் வரையே சென்று கொண்டிருந்தது. இருந்தபோதும் தற்போது உங்கள் கைகளில் இருக்கும் இந்த "பூக்குமோ? புது உலகு" எனும் புத்தகத்தை வெளியிட தூண்டியவர்கள் என் பெற்றோர்களும், நண்பர்களும், உறவினர்களுமே ஆகும். இந்தபுத்தகத்தை வெளியிடுவதற்கு நிதி உதவி செய்த கிழக்கு மாகாண முதலமைச்சர் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு எனது கவிதை வெளிவரும் வரை எனக்கு பல வழிகளிலும் ஊக்கமளித்து உதவிய பெற்றோருக்கும், உடன் பிறப்புக்களுக்கும், நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இன்னும் இந்நூலுக்கு எவரெல்லாம் எவ் எவ் வழிகளில் உதவினார்களோ அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிப்பூக்களை காணிக்கையாக செலுத்துகின்றேன்.

நன்றி.

என்றும் பிரியமுடன்

**ஆர்.ராகுலன்** *(மட்டு நகர் ராகுல்)*
*சின்ன உப்போடை, மட்டக்களப்பு.*
*Tel: 067-3678261*

# சாதி என்றசொல்லை அழித்திடுவோம்

*சாதி என்பது எதற்காக?*
*அந்தக்கொடுமையில் வரும் வேதனை எதற்காக?*
*மனிதன் மனம் அறிந்தால் போதுமே!*
*அவன் சாதியறிய தேவை என்ன?*

*சாதி யென்ற எண்ணம் எதற்காக?*
*அவை மாறவேண்டும் மிக விரைவாக!*
*சாதி என்பதை அழித்து விட்டு– நாம்*
*வாழ்ந்திடுவோம் மனித உணர்வோடு.*

*சாதி அந்தஸ்து வேண்டாமே!*
*என்றும் சாதிக் கலவரம் வேண்டாமே!*
*சாதிப் போட்டிகள் வேண்டாமே!*
*எங்கும் சாதிப்பேச்சுகள் வேண்டாமே!*

*சாதி பார்ப்பவன் மனிதனல்ல!*
*அதை நினைத்து வாழ்பவனும் மனிதனல்ல!*
*சாதி என்ற சொல்லில் மோதிக் கொண்டு*
*தினம் வாழ்ந்து கொள்பவனும் மனிதனல்ல!*

*சாதி என்பதை சாய்த்து விட்டு!*
*நாம் மனிதர் என்பதை நினைவில் வைத்து!*
*சாதி என்ற சொல்லை ஒழித்துவிட்டு!*
*நாம் வாழ்ந்திடுவோம் மனித உணர்வோடு!*

# புது யுகம் தேடும் பெண்

*ஆண் ஆதிக்கம் ஒழித்திடுவோம்!*
*ஆண்கள் அடக்கு முறையில் இருந்து மீண்டுவருவோம்!*
*புது யுகம் ஒன்று செய்து வைத்து*
*அதில் பெண்கள் சாதனைகளை பதித்திடுவோம்!*

*எம் சுதந்திரத்தை தட்டிப்பறித்து*
*எம் உணர்வுகளை அடக்கிவைத்து*
*எம்மை இயக்க நினைக்கும் கருணையற்ற ஆண்களை*
*வென்றிடவே படைத்திடுவோம்! புது யுகம் ஒன்று!*

*காலங்களால் அழியாத*
*பெண்களுக்காக விதிக்கப்பட்டமூடத்தனமான–*
*நிபந்தனைகளை உடைத்து எறியவே*
*ஆக்கிடுவோம் பெண்ணே! புதுயுகம் ஒன்று.*

*பெண்மையின் தன்மை சொல்ல!*
*பெண்மையின் உணர்வைக் காண்பிக்க!*
*பெண்மையின் மென்மை அறிய!*
*செய்திடுவோம் பெண்ணே! புதுயுகம் ஒன்று*

*எம்மை அடக்கி வைத்து ஏளனமாய்*
*சிரிக்கும் ஆண் ஆதிக்க வாதிகளே!*
*உம்மை வெல்லும் காலம்*
*வெகு தொலைவில் இல்லை.*

# ஏழையின் குரல்

*உலகைப்படைத்தவன் செவிடனானான்!*
*உலகினைப் பார்த்துச் செவிடனானான்!*
*உண்மை ஏழையின் குரல் கேட்டு*
*உயர்வான இறைவனே செவிடனானான்!*

*மழலையின் குரலில் மகிழ்ச்சியுண்டு!*
*பாடகன் குரலில் இனிமையுண்டு!*
*ஏழையின் குரலில் எது? உண்டு–வெறும்*
*பசியும், பட்டினியும் தான் உண்டு!*

*ஏழையின் குரலைக் கேட்பீரோ?*
*அதில் உள்ள வேதனை காண்பீரோ?*
*ஏழையின் அவலம் தெரிவீரோ?*
*இந்த ஏழையின் ஆசைகள்புரிவீரோ?*

*திருப்பள்ளி எழுச்சி எழுப்பிவிடும்!*
*அந்த இறைவனின் கண்களை திறந்து விடும்!*
*இந்த ஏழையின் குரலும் கேட்காதோ?*
*அந்த இறைவனின் கண்களும் திறக்காதோ?*

*ஏழையின் குரலில் கருணை உண்டு!*
*அவன் வாழ்வில் எளிமைமிகஉண்டு!*
*இந்த ஏழைக்கு நிம்மதி எங்குண்டு?*
*இந்த ஏழைக்கு ஆதரவு யார்? உணடு*

# வறுமை எனும் கொடியநோய்

பாரெங்கும் பரவியுள்ள கொடியநோய்!
படிப்பவனையும் ஆட்கொள்ளும் கொடிய நோய்!
பாமரனையும் பிடித்து ஆட்டும் கொடிய நோய்!
பணத்தாலே மாறும் கொடிய நோய்! – வறுமை எனும் கொடிய நோயே!

வாழ்க்கையை மாற்றிடும் கொடிய நோய்!
நிம்மதி கெடுக்கும் கொடியநோய்!
நித்தமும் வாட்டும் கொடியநோய்!
வறுமையெனும் கொடிய நோயே!

பணம் உள்ளவனுக்கு எதிரி இந்த நோய்!
பணம் அற்றவனுக்கு நண்பன் இந்த நோய்!
மனிதன் இன்பத்தை புதைக்கும் இந்த நோய்!
மனிதன் துன்பத்தினை பெருக்கும் இந்த நோய்!

சுமைகளைக் கூட்டும் இந்த நோய்!
மனித உறவினையும் பிரிக்கும் இந்த நோய்!
வாழ்க்கைப் பாதையினை மாற்றும் இந்த நோய்!
மனிதனை பெரும் பள்ளத்தில் தள்ளும் இந்த நோய்!

மனிதனை தாழ்த்திவைக்கும் ஒரே நோய்!
மனிதனை ஏழையாய் மாற்றும் இந்த நோய்!
வைரஸால் பரவாது இந்தநோய்!
மனித வர்க்கமே வெறுத்து நிற்கும் ஒரே நோய்!

# உலக மொழிகளில் தமிழ் மொழி

*மல்லிகை, தாமரை, ரோஜாவென*
*நறுமணம் வீசும் வண்ண மலர்கள்– மாநிலத்தில்*
*தினம், தினம் மலர்ந்தாலும் !மொழியறிவை*
*சிறக்கவைக்கும் தமிழ் அன்னை போலாகுமா?*

*அழகு மலர்களோ! எம்*
*எண்ணத்தைக் கவர்ந்திடும்!–நம்*
*தமிழ் மொழியோ! தமிழர்*
*மொழியறிவை சிறக்கவைக்கும்.*

*வண்ண மலர்களின் நறுமணமோ!*
*வையகத்தில் சில நொடிதான்.*
*எம் தமிழ் அன்னை நறுமணமோ!*
*இவ்வுலகில் நிரந்தரமாம்.*

*வண்ண மலர்களின் வண்ணமோ– அழிந்துவிடும்!*
*எம் தமிழ் அன்னை வண்ணமோ!*
*கல்வியாய் கற்றவர் மனதில்*
*அழியாமல் நிறைந்து விடும்.*

*வண்ண மலர்களின் வாழ்க்கையோ!*
*இவ் உலகில் சில கணம்தான்! எம்*
*தமிழ் அன்னை வாழ்க்கையோ! காலம் காலமாய்*
*மலர்ந்திடும் தமிழ் எனும் தேனைச் சிந்தியவாறு எம் மூச்சோடு.*

# புதுயுகம் படைத்திடுவோம்

*புதுயுகம் படைத்திடுவோம்!–*
*அதில் புதுமைகள் பல செய்துவைப்போம்.*
*புதியதோர் வாழ்விற்காய் நாளை எண்ணி*
*புதுயுகம் தனைப் படைத்திடுவோம்!*

*புத்தியில்லா மனிதர்க்கு அன்புதனைப் பாடமாக்கி !*
*பூமியெங்கும் மனிதப் பயிர் முளைக்க!*
*புரண்டு வீழ்ந்த உலகை நிமிர்த்தி வைத்து !*
*புதுயுகம் தனைப் படைத்திடுவோம்!*

*எதற்காக? இவ்வுலகில் ஏவுகணை!*
*ஏனிந்த மனிதக்கொலைகள்!*
*அனைத்தையும் மாற்றி அமைத்து புதுச்சரித்திரம்*
*உருவாக்க புதுயுகம் தனைப் படைத்திடுவோம்.*

*இன்னல் எல்லாம் உடைத்தெறிந்து!*
*கனிவாக வாழ்ந்திடவே– நாம்*
*கற்றபாடத் துணைகொண்டு*
*கட்டியெழுப்புவோம்! புது உலகை.*

# ஏன் இந்த மௌனம்

*திறன் இருந்தும் ஊமையாய்! சொந்தம் இருந்தும் அனாதையாய்!*
*காதிருந்தும் செவிடனானாய்!*
*வாய் இருந்தும் ஊமையாய்! ஏன்?*
*இந்த மௌனம் மானிடா!*

*சொந்தங்கள் உனை வாழ்த்த!*
*உலகெங்கும் உனைப்போற்ற!*
*செய்தி எல்லாம் உன் பெயர் சொல்ல!*
*திறன் படைத்த மானிடா ஏன்? இந்த மௌனம்.*

*உன்பேச்சில் வெற்றி மின்னும்!*
*உன்பேச்சில் நாடு அடங்கும்!*
*உன் செயலில் உலகே தலை சிறக்கும்!*
*வேளை வந்த பின்பும் ஏன்? இந்த மௌனம் மானிடா!*

*உன் பேச்சில் முத்துக்கள் சிதறட்டும்!*
*அவை இளைய சமுதாயம் உயர்த்தட்டும்!*
*உன் மௌனம் என்பதை கலைத்து விட்டு வா!*
*மனிதா இன்னும் தாமதம் ஏன்?*

*உன் பேச்சில் உணர்வுகள் பொங்கட்டும்!*
*உன் பேச்சில் இன்பங்கள் பெருகட்டும்!*
*உன் பேச்சில் துன்பங்கள் மறையட்டும்!*
*மனிதா! உடைத்தெறி உன் மௌனத்தை.*

# வாழ்க்கை எனும் நாடக மேடை

இறைவன் எனும் இயக்குனரால்!
மனிதர் என்ற நடிகர்களாய்!
நடித்துக்கொண்டிருக்கின்றோம்!
நாம் வாழ்க்கை எனும் நாடக மேடையில்.

நல்லபாத்திரமும் மிக உண்டு!
இதில் தீய பாத்திரம் மிக உண்டு!
இன்பமும், துன்பமும் சேர்ந்து வந்து
இந்த நாடகத்தை இன்னும்மெருகூட்ட!

இந்தத் தொடரில் எவரும் நிலைப்பதில்லை !
அந்த இயக்குனருக்கும் அது பிடிப்பதில்லை!
அதை மனிதரும் இன்னும் புரியவில்லை!
அவன் கதையின் முடிவை அறியவில்லை!

தினம், தினம் பிறப்பர் சில மனிதர்!
இதில் தினம் தினம் இறப்பர் சில மனிதர்!
பிறப்பால் மகிழ்வர் சில மனிதர்!
இந்த இறப்பால் அழுவர் சில மனிதர்!

நடந்த காட்சியை நினைத்திருந்தால்!
நாம் நடக்கப்போவதையும் அறிந்திருந்தால்!
நாடகத் தொடரில் இனிமை எங்குண்டு? – அதில்
நடிப்பவனுக்கு இன்பம் எதிலுண்டு?

மகிழ்ச்சி எனும் சில்லு பூட்டி!
நம்பிக்கை எனும் அச்சாணிகொண்டு!
நாம் நகர்த்தும் வாழ்க்கை ரதத்தில்
வந்து வந்து குறுக்கறுக்கும்– பலவித தடைக் கற்கள்

துன்பமும், பிரிவும் சேர்ந்து விரட்டும்–பல
போட்டியும் சண்டையும் வாழ்வைக் கலைக்கும்.
கண்ணீரில் கைக்குட்டை நனைந்து இழகும்!
எம் வாழ்வில் வெறுப்பு மனிதர் எமக்கே தோன்றும்.

இவையாவும் கடந்து நீ ஜெயித்து வந்தால்!
வெற்றிப்பாதை நோக்கி நீ நகர்ந்து சென்றால்!
வாழ்க்கை எனும் நாடகத்தில் பேசப்படுவாய்!
சிறந்த பாத்திரம் என்று பெயர் பெற்று ஒளிர்வாய்!

# நிலவே நீ தேயாதே

*இரவின் இருளை*
*இனம் காணமுடியாமல்*
*இனிமையான ஒளியாக்கும்*
*இராக்கால நிலவே! நீ தேயாதே.*

*நீ முழுமை பெற்றால் பௌர்ணமியாம்!*
*நீ தேய்ந்து விட்டால் அது அமாவாசையாம்!*
*பௌர்ணமிதான் எமக்கு வேண்டும்*
*ஆகையால் நிலவே நீ தேயாதே!*

*சூரியனில் ஒளி பெற்று!*
*சுவிகரித்தாய் மானிட உள்ளங்களை!*
*சுகமாக சோறூட்ட குழந்தைகளுக்கு நீ வேண்டும்!*
*நிலவே நீ தேயாதே!*

*நட்சத்திரங்கள் உடன் இருந்து*
*வானத்தை அலங்கரிக்க*
*மாதம் முழுவதும்மங்கலமாய் அமைவதற்கு*
*நீ வேண்டும்! நிலவே நீ தேயாதே!*

*வான் வீதியும் கலகலக்க !*
*ஒளிதரும் சூரியனும் விறைத்து நிற்க!*
*பெண் அழகினை தோற்கடிக்க நிரந்தரமாய்*
*நீ வேண்டும் நிலவே! நீ தேயாதே!*

# அனர்த்தம்

நீல நிறவானம் இடைவிலக!– அந்தக்
கார்முகில்கள் எல்லாம் ஒன்று சேர!
மெல்ல அடித்தது காற்று ஒன்று
பூமி மெல்ல நனைந்தது வண்ணம் கொண்டு.

சோ! எனப் பெய்யுது மாரி மழை
அதில் மூழ்கியே போகுது மக்கள் மனை!
மக்கள் ஓடி ஒழிந்தனர் வெள்ளம் கண்டு
எந்தன் நெஞ்சம் உடைந்தது காட்சி கண்டு.

வெள்ளம் வந்ததடா! கரை புரண்டு!
மக்கள்பிணமும் மிதந்ததடா! மேல் எழுந்து!
பிஞ்சுக்குழந்தை அழுததடா! விம்மிக்கெண்டு
ஓடும்பிணத்தில் தன்பெற்றோரை தேடிக்கொண்டு.

சுற்றியடித்தது காற்று ஒன்று!
அது யாரைத்தான்? தேடியது இங்குவந்து
கையில் காவியே! சென்றது பல் உயிரை–
இருந்ததும் அதில் தப்பிப்பிழைத்ததில் நானும் ஒன்று!

*எரிமலைக் குழம்பு வெடிக்குதடா!*

*மக்கள் மனமும் இரண்டாய் பிளக்குதடா*

*ஒடித்திரியுது கால் நடைகள் – மக்கள்!*

*மனமும் சீற்றம் இப்போ கொள்ளுதடா*

*அனர்த்தம் என்ற சொல்லே வேண்டாம்!*

*வாழும் மக்கள் உயிர் இனிப் போகவேண்டாம்!*

*உயிர் என்ற சொல்லிற்கு ஈடு இல்லை– இறைவா!*

*காப்பாய் நீயே இக்காசினியை.*

# நள்ளிரவு

*சில ஆறறிவும் அடங்கிவிடும் நள்ளிரவில்!*

*சில ஐந்தறிவும் ஒலி எழுப்பும் நள்ளிரவில்!*

*கனவுகள் ஆரம்பிக்கும் நள்ளிரவில்!*

*நம் ஊர் திருடனும் உழைப்பது நள்ளிரவில்!*

*தெரு நாய்கள் இசைபாடும் நள்ளிரவில்!*

*அதை கேட்பவன் நடுங்குவது நள்ளிரவில்!*

*சில பேய்களும் திரியுமாம் நள்ளிரவில்!*

*அதை பார்த்தவன் யார்? இந்த நள்ளிரவில்!*

*வெண்ணிலவும் உச்சம் கொள்ளும் நள்ளிரவு!*

*பூமியில் மெல்லிய ஒளி பரப்பும் வெண்ணிலவு!*

*வான் வீதியில் அழகாக ஒரு நிலவு!*

*அதை முத்தமிட ஆசைப்படும் நள்ளிரவில் என் மனது!*

*நள்ளிரவில் தூங்காது கடல் அலைகள் !இந்த*

*நள்ளிரவிலும் ஓயாது என் கவி அலைகள் !*

*நள்ளிரவில் புரண்டுவரும் நினைவலைகள்!*

*படைத்திடவே காத்திருக்கும் ஆயிரம் கவி அலைகள்!*

# சிறகு ஒடிந்த பறவை

*சுற்றித்திரிந்தது ஒருகாலம்!*
*நான் பாடித்திரிந்தது ஒருகாலம்!*
*இயற்கையை ரசித்தது ஒருகாலம்!*
*பெரும் மகிழ்வுடன் வாழ்ந்தது ஒருகாலம்!*

*துன்பக்கடலில் நீந்துகின்றேன் தற்காலம்!*
*தீராத வேதனையில் வாழ்கின்றேன் தற்காலம்!*
*என் நிலை அறிந்து புலம்புகின்றேன் தற்காலம்!*
*என் உறவுகளை தேடுகின்றேன் தற்காலம்!*

*வயல் வெளி கண்டது ஒருகாலம்!*
*வீசும் தென்றலில் மிதந்தது ஒருகாலம்!*
*பல உணவுகள் தேடியது ஒருகாலம்!*
*பெரும் களிப்புடன் நான் வாழ்ந்தது ஒருகாலம்!*

*என் கடந்த வாழ்வை நினைக்கின்றேன் தற்காலம்!*
*என் கண்ணீரில் நனைகின்றேன் தற்காலம்!*
*என் சிறகொன்றை தேடுகின்றேன் தற்காலம்!*
*ஆதரவு அற்றுக் கிடக்கின்றேன் தற்காலம்!*

*பறக்கும் பறவையென்ற பெயர் எனக்கு ஒருகாலம்!*
*சிறகு ஒடிந்த பறவையாம் நான் தற்காலம்!*
*சிறகடித்து பறந்தது நான் ஒருகாலம்!*
*சிறகு ஒடிந்து புற்தரையில் நான் தற்காலம்!*

# கருத்துடன் கற்போம்

*கல்வி எமக்குக் கண்ணாகும் !*
*கருத்துடன் கற்பது முறையாகும் !*
*கல்வி எமக்கு ஒளியாகும் !*
*கவனம் வைத்திடல் கடனாகும்!*

*பள்ளிப்பருவம் இனிதாகும் !*
*பயின்றிடக் கல்வி எளிதாகும்!*
*அள்ளினும் குறையாத் திருவாகும் !*
*அனைவரும் பயில்வது கடனாகும்!*

*வாழ்வில் நலன்கள் நமதாகும்!*
*வையகம் எமது வசமாகும் !*
*தாழ்விலும் தளரா உரமாகும் !*
*தரனி மதித்திட வழியாகும்!*

*இருளாம் மடமை அகன்றோடும் !*
*இனிதாம் ஞானம் எமையாளும் !*
*அருளாம் கல்வி வசமாகும் !*
*அவனியில் மேம்படத் துணையாகும்!*

# எங்கு?செல்கின்றாய் (சீதனம்)

*சீதனச் சந்தையிலே சீர்திறத்தினைக் காட்டி!*
*ஆதனமும், அதிசீரும் அடுக்கடுக்காய்ப் பணமும்!*
*வேதனமாய் பறிக்கின்ற விந்தை மிக்க மானுடத்தின்!*
*நூதனத்தை எங்கு? கற்றாய் நின்று நீ பதில் சொல்லு!*

*காலத்தின் கோலத்தால் கண்ணீர் சிந்தி நிற்கும்!*
*காரிகையர் சோகத்தை கண்டும் நீ காணாமல்!*
*ஏலத்தில் போகின்ற எண்ணற்ற ஆடவருள்*
*ஏன்? நீயும் அணிவகுத்தாய் எனக்கொரு பதில் சொல்லு!*

*சோதனையில் வேதனையில் சுழலும் குடும்பங்கள்!*
*நாதியற்ற நிலை கண்டும் நாணம் நீ கொள்ளாமல்!*
*சீதனத்தைக் கேட்கின்றாய் சிறுமை மிக்க மானிடனே!*
*ஆதனங்கள்தான் வாழ்வா? அகந்திறந்து பதில் சொல்லு!*

*இல்லறச் சோலையிலே! இன்பகானம் பாடுதற்கும்,*
*நல்லறத்தைநாடி நலம் சேர்த்து வாழ்வதற்கும்!*
*நல்லார் வகுத்திட்ட நற்பாதை தனைமறந்து!*
*கல்லான மனதோடு காசைத்தேடும் காளையே! நீ எனக்கொரு பதில் சொல்லு!*

# ஊழல் தீயே ஒழிந்து விடு

உக்கிரம் கொண்டெரிகின்றது ஊழல் எனும் பெருந்தீ!
உணர்வு கலங்கி அழுகின்றாள் உலக மாதா பாருங்கள்
சீக்கிரம் இதற்கொரு முடிவெடுப்போம்
மக்களே! சிறுமை ஒழிக்க வாருங்கள் !

சுழலும் உலகப் பெருவெளியில் சுடரது ஏந்த வாருங்கள்!
உழலும் மாந்தர் வாழ்வுதன்னை ஒடுக்கும்
ஊழலைக் களை எடுப்பின் உரம் பெறும் மக்கள் வாழ்வதுவே!
நிழலாய் தொடரும் நீசமது நீங்கச் செய்வோம்
மக்களே! வாருங்கள்.

மண்ணில் மாந்தர் வாழ்வதனை மழுங்கச்செய்யும்
மகாபாதகத்தை மானிட வேரை அறுக்கும் மாயப் பேயாம்!
இலஞ்சத்தை இன்னும் தழைக்கச் செய்யாமல்
இதற்கொரு முடிவை கண்டிட மானிடரே! வாருங்கள்.

தேசம் திகழ்ந்திட வேண்டுமெனில் தீமைகள் யாவுமே !
நாசம் செய்யும் உறுதியுடன் நாடும் மனம் கொள்வோம் !
வேசம் போட்டுப் பிழைப்பு கொள்ளும் பேதையரை
கோசமிட்டுக் கலைக்கும் கொள்கையுடனே! மானிடரே!
வாருங்கள்.

# முதியோர் வாழ்வை ஒளிரச் செய்வோம்

*முதுமை மூப்பு இயற்கையின் நியதி!*
*முதன்மை கொடுப்போம் முதியோர் அவர்க்கே!*
*மானிட வாழ்வில் மாறிடும் கோலம்!*
*மறந்திடல் வேண்டாம். அதுவே! சீலம்.*

*வாழும் பூமி வளம் பெறும் நோக்கில்*
*வீழும் வியர்வையின் வெம்மை மறந்தே!*
*நாளும் உழைத்தே நாட்டை வளர்த்த*
*எந்தை முதியோர் எமக்கவர் தெய்வம்!*

*பேச்சும் மாறிடும் பார்வையும் குறைந்திடும்!*
*நடையில் தளர்வும் மெதுவாய் ஏற்படும்!*
*முடிகளும் வெளுத்திடும் சோர்வுகள் ஏற்படும்!*
*வெள்ளைப்பிரம்பும் கையினில் சேர்ந்திடும்!*

*பிறந்த குழந்தைகள் முதியவராவதும்!*
*முதியவரானபின் குழந்தைகளாவதும்!*
*உலகில் ஏற்படும் அற்புத மாற்றமே !*
*நாமேகாப்போம் முதியோர் வாழ்வினை*

# கவிதை

ரசனை கொண்ட உள்ளங்களின் இறுதி வடிவம்!
உயிரற்ற ஒன்றிற்கு உயிர் கொடுக்கும் சொல்வடிவம்!
காலத்தின் சுவடுகளை பதியும் எழுத்துவடிவம்!
நீயும், நானும் விரும்பும் கலை வடிவம்!

எப்போது பிறக்கும் என சொல்ல முடியாத புதிர் வடிவம்!
அன்புடன் அரவணைக்கும் விசை வடிவம்!
தனிமையை விலக்கிவைக்கும் உறவு வடிவம்!
இயற்கையை கண்முன் கொண்டுவரும் புதுமை வடிவம்!

புலவர்கள் உரையாடும் மொழி வடிவம்!
பாரதியும் எழுதி வைத்த பாட்டு வடிவம்!
நெஞ்சத்தின் வடிவங்களை உலகிற்கு கொண்டு வரும் ஊடக வடிவம்!

இன்பத்திலும் துன்பத்திலும் தோன்றும் சுவாரஸ்ய வடிவம்!
இதுவே அனைவரையும் கவரும் அழகிய சொல் வடிவம்!

"கவிதைகளை கவிதை உணர்வோடு
வாசிக்கும்போதே அது கவிதை
எனும் சிறப்பைப் பெறுகின்றது."

ஆர். ராகுலன் (*மட்டு நகர் ராகுல்*)
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

வாழ்க! தமிழ் வளர்க! தமிழ்



## நூலாசிரியர் பற்றி

கல்முனை உவெஸ்லி உருவாக்கிய கல்விமான்கள், அரசியல் வாதிகள், புத்தி ஜீவிகள், என்றவரிசையில் பலர் இலக்கிய கர்த் தாக்களாக உருவாகியிருக்கிறார்கள். அவர்களின் செயற்பாட்டுக்கு அவர்கள் பாடசாலைக் காலத்தில் அவர்களை ஊக்குவித்த ஆசிரியர் களும், களமமைத்துக் கொடுத்த பாடசாலையும் உற்ற துணையாக அமைந்திருக்கிறது.

கல்முனையில் இருந்து தகப்பனாரின் தொழில் காரணமாக மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் ரவீந்திரா-ராகுலனை ஆரம்ப வகுப்பில் இருந்தே அவரை அறிவேன். அமைதியான நோக்கும், அலட்டிக்கொள்ளாத தன்மையும் இவரில் நான் கண்டவை. வகுப்பறையில் எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு 'பூக்குமோ? புது உலகு' என்ற தலைப்பில் கவிதைகளை தொகுத்து வெளிக் கொணர்வதையிட்டு பாராட்டும் அதேவேளையில் மேலும் வாசித்து அனுபவித்து இன்னும் மிளிர வாழ்த்துகின்றேன்.

**வ.பிரபாகரன்**
அதிபர்
உவெஸ்லி உயர்தர பாடசாலை
கல்முனை